# ஸூரா அல் பாத்திஹாவின் விளக்கம் – (தொடர் 07)

تفسير سورة الفاتحة

Moulavi M.M.Zaky B.A. (Hons)

## இஜ்திஹாதி (ஆய்வின் அடிப்படையில் அமைந்த பெயர்கள்)

### 1. ஸூரதுஷ்ஷிபா, ஸூரதுஷ்ஷாபியா

ஷிபா: என்றால் நிவாரணம் என்றும், ஷாபியா என்றால் நிவாரணம் தரக்கூடியது என்றும் பொருள் படுகின்றது. அதிகமான குர்ஆன் விரிவுரைகளில் இவ்விரு பெயர்களும் இடம்பெற்றுள்ளன. பல நபிமொழிகள் தருகின்ற கருத்துக்களின் அடிப்படையிலேயே அறிஞர்கள் இப்பெயர்களை இட்டுள்ளனர். அவற்றிற் சில வருமாறு:-

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பாதிஹதுல் கிதாப் எனும் அத்தியாயம் நச்சு(ப் பொருட்)களில் இருந்து நிவாரணம் தரக் கூடியது.

(இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும், பார்க்க அல்பானீ: லஈ:புல் ஜாமி:: பக்: 576)

பாதிஹதுல் கிதாப் எனும் அத்தியாயம் எல்லாநோய்களுக்கும் நிவாரணியாகும்.

(நூல்: தாரமீ: 337 (2/538)

(இதுவும் பலவீனமான செய்தியாகும். பார்க்க: அல்பானீ: ளஈ:புல் ஜாமி: , பக்: 576)

இப் பெயரை இமாம்களாந ஸம்கஷரீ (ரஹ்), தப்ரஸீ (ரஹ்), ராஸீ (ரஹ்), குர்துபீ (ரஹ்), நஸபீ (ரஹ்), இப்னு ஜிஸ்ஸீ (ரஹ்), இப்னு கதீர் (ரஹ்), பைழாவீ (ரஹ்), அபுஸ்ஸீஊத் (ரஹ்) போன்ற பிரபலமான அறிஞர்கள் அனைவரும் தமது விரிவுரைகளிற் சுட்டிக்காட்டுள்ளனர்.

ஷிபா, ஷாபியா எனப் பெயர் வரக் காரணம்:

இமாம் ராதீ (ரஹ்) கூறியதாவது:

நோய்களில் உளரீதியானவை, உடல்ரீதியானவை என இரு வகைகள் இருக்கின்றன. அவ்வாறே இறைநிராகரிப்பும் ஒரு நோயாகும், என அல்லாஹ் கூறுகிறான்.

அவர்களுடைய உள்ளங்களில் ஒரு நோய் இருக்கின்றது.

(அல் – பகரா: 02: 10)

அவ்வாறே இவ்வதியாயம் இஸ்லாத்தின் அடிப்படைகளையும் அதனுடைய உட்பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. எனவே, இது யதார்த்தமாகவே மூன்று வகைகயான நோய்களுக்கும் நிவாரணமாக அமையும்.

மேற்கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில், அஷ்ஷிபா மற்றும் அஷ்ஷாபியா என்பன அத்தியாயத்திற்குரிய நேரடியான பெயர்கள் அன்று, மாறாக, அதன்பண்புகளைக் கூறுகின்ற காரணம் பெயர்களாகும். அது நோய்களுக்கு நிவாரணம் தேடி ஓதப்பட வேண்டும். என்பதே மிகச் சரியான கருத்தாகும். இதனைக் கீழ்வரும் கூற்று மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறியதாவது:

உங்களுக்கு நோய், அல்லது உடம்பில் வலி ஏற்பட்டால், "அல்பாத்திஹா" எனும் அத்தியாயத்தை ஓதுங்கள் அது உங்களுக்கு நிவாரணம் தரும்.

(நூல்கள்: குர்துபீ (1/113), ஸுயூத: அத்துர்ர்ரூல் மன்ஸூர் (112)

ஆகவே, இவ்விரண்டும் அறிஞர்கள் ஆய்வின் அடிப்படையில் இட்ட பெயர்களே தவிர, நபி (ஸல்) அவர்களால் இடப்பட்ட பெயர்கள் அல்ல.

2. ஸூரதுர்ருக்யா

"அர்ருக்யா" என்றால் ஓதிப்பார்த்து நிவாரணம் பெறத்தக்கது என்று பொருள். இதற்கு அறிஞர்கள், ஹஸ்ரத் அபூ ஸஈத் அல்குத்ரீ (ரழி) அவர்கள் கூறுகின்ற செய்தியை ஆதாரமாக கொண்டுள்ளனர். அவர்கள் கூறியதாவது:

நாங்கள் ஒரு பயணத்தில் சென்று கொண்டிருந்த போது (ஓய்வெடுப்பதற்காக) ஓரிடத்தில் இறங்கித் தங்கினோம். அப்போது ஓர் இளம் பெண் வந்து, "எங்கள் கூட்டத் தலைவரைத்தேள் கொட்டிவிட்டது. எங்கள் ஆட்கள் வெளியே சென்றுள்ளார்கள். அவருக்கு ஓதிப்பார்ப்பவர் உங்களில் எவரேனும் உண்டா?" என்று கேட்டார்கள். அவளுடன் எங்கலில் ஒரு மனிதர் சென்றார். அவருகுக ஓதிப்பார்க்கத் தெரியும் என்று நாங்கள் நினைதுதக் கூட இல்லை. அவர் சென்று ஓதிப்பார்த்தார். உடனே அந்தத் தலைவர் குணமடைந்துவிட்டார். ஆகவே எங்கலுக்கு 30 ஆடுகள் (அன்பளிப்பாக) வழங்குமாறு அவர்களுடைய தலைவர் உத்தரவிட்டதுடன் எங்களுக்குப் பாலும் கொடுத்தனுப்பினார்.

ஓதிப்பார்க்கச் சென்ற அந்த மனிதர் திரும்பிவந்த போது அவரிடம், "உமக்கு நன்றாக ஓதிப்ராக்கத் தரியுமா? அல்லது ஏற்கனவே, நீர் ஓதிப்பர்ப்பவராக இருந்தீரா? என்று கேட்டோம். அவர் "இல்லை, குர்ஆனின் அன்னை என்றழைக்கப்படும் (அல்பாத்திஹா) அத்தியாயத்தைத் தான் ஓதிப்பார்த்தேன் என்று சொன்னார். "(இந்த 30 ஆடுகளையும்) நாம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் செல்லாதவரையில் அல்லுத சென்று (விளக்கம்) கேடாகாதவரையில் ஒன்றும் செய்து விடாதீர்கள்" என்று ங்களுக்கிடையில் பேசிக் கொண்டோம். நாங்கள் மதீனா வந்து சேர்ந்தபோது, இது குறித்து நபி (ஸல்) அவர்களிடம் கூறினோம். "இது – அல்பாத்திஹா அத்தியாயம் – ஓதி நிவாரனம் பெறத்தக்கது. என்று அவருக்கு எப்படித் தெரியுமா?!! அந்த ஆடுகளைப் பங்கிட்டு அதில் ஒரு பங்கை எனக்கும் தாருங்கள்! " என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல்: புகாரி: 2276, 5007, 5736, 5749, முஸ்லிம்: 4428, 4429)

ஆகவே, இந்த அத்தியாயம் முழுமையாக ஓதிப்பார்த்து நிவாரணம்பெறத்தக்கதாகும் என்பது தெளிவாகின்றது.

ருக்யா எனப் பெயர் வரக் காரணம்.:-

இதற்கு மேற்கூறிய செய்தி ஆதாரமாகும். அதில் "ருகிய்யா" என்பது பெயராக இடம்பெறவில்லை. மாறாக அந்த அத்தியாயத்தின் பண்புகள், மற்றும் பலன்களில் ஒன்றையே இந்த நபிமொழி எடுத்துக் காட்டுகின்றது. எனவே, இதுவும் காரணப் பெயராகும், நோயாளிகள் அதனை ஓதி நிவாரணம் தேட வேண்டும், என்பதையே குறிக்கின்றது.